## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்

**ந.க.எண்.3098/ஆ5/2024, நாள்.30/06/2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தாய் தமிழ் நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய சூலை 18-ம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டமை – 2025 – 2026ஆம் ஆண்டிற்கு "தமிழ்நாடு நாள் விழா" கொண்டாடுதல் – 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் நடைபெறும் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 04.07.2025 அன்று நடைபெறதல் மாணவர்கள் கலந்து கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

1. அரசாணை (நிலை) எண். 52, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.1) துறை நாள். 10.03.2025
2. வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடித ந.க.எண்.360/2025, நாள். 25.06.2025

•••••

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பு எண். 988 நாள். 30.10.2021-ன் படி தாய் தமிழ் நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18-ம் நாளினையே "தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பெற்றது. அவ்வறிவிப்பினை செயல்படுத்துவதற்காக மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் (அரசு / அரசு உதவிபெறும் / தனியார் பள்ளிகள்) 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் கீழ்காணும் படி நடைபெறும் என பார்வை 2-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாள்– 04.07.2025 (வெள்ளிக்கிழமை)
**நேரம் – முற்பகல் 9.30 மணிக்கு**
**இடம் – அரசு மேல்நிலைப் பள்ளி, கொணவட்டம், வேலூர் மாவட்டம்**

மேற்காணும் போட்டியில் பங்கேற்கும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிசாக ரூ. 10,000/– இரண்டாம் பரிசாக ரூ. 7000/– மூன்றாம் பரிசாக ரூ. 5,000/– மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பெறும் எனவும், மாவட்ட அளவில் முதல் இடத்தில் வெற்றி பெறும் மாணாக்கர்கள் மாநில அளவில் நடைபெறும் கலந்துக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளுக்கான தலைப்புகள்**

| | கட்டுரைப் போட்டி | | பேச்சுப்போட்டி |
|---|---|---|---|
| 1 | கடமை, கண்ணியம், கட்டுப்பாடு | 1 | ஆட்சிமொழி வரலாற்றில் கீ. இராமலிங்கம் |
| 2 | அன்னைத் தமிழே ஆட்சிமொழி | 2 | பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரின் தமிழ் ஆட்சி சொல் பணி |
| 3 | தொன்றுதொட்டு தமிழ்நாடு எனும் பெயர் | | |
| 4 | அறிஞர் அண்ணா கண்ட தமிழ்நாடு | | |
| 5 | ஆட்சிமொழி விளக்கம் | | |
| 6 | தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய நிகழ்வு | | |
| 7 | ஆட்சிமொழி – சங்க காலம் தொட்டு | | |
| 8 | இக்காலத்தில் ஆட்சிமொழி | | |

மேற்காணும் போட்டியில் ஒரு போட்டிக்கு ஒரு மாணவர் வீதம் ஒரு பள்ளியிலிருந்து இரண்டு மாணாக்கர்கள் (பேச்சு = 1, கட்டுரை =1) பங்கேற்க வேண்டும். இப்போட்டியில் கலந்துக்கொள்ளும் மாணாக்கர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் போட்டி நடைபெறும் அன்று ஒப்படைக்கவேண்டும் மற்றும் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மாணாக்கர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அரசு / நிதியுதவிபெறும் / நடுநிலை / உயர்நிலை /மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு – கட்டுரை போட்டி மற்றும் பேச்சுப் போட்டியில் பங்கு பெறும் மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Spreadsheet–ல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.)

இணைப்பு

1. போட்டியின் விதிமுறைகள்
2. படிவம்
3. google spreadsheet – https://docs.google.com/spreadsheets/d/1iCqM58VL4go2CCQaMOd8LbHTbX1E808dTQWbldU-9g0/edit?usp=sharing

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு / நிதியுதவி பெறும் / நடுநிலை / உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்,
   வேலூர் மாவட்டம்,
2. மாவட்ட கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. தலைமையாசிரியர்,
   அரசு மேல்நிலைப் பள்ளி, கொணட்டம்.
   (போட்டிக்கான போதி வசதி செய்து தரும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)